<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும்  அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. **C.** ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **559 / 2022** நாள்: **18.02.2025** வா.சா.**2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சிராஜுதின்** | தொழில் | : போட்டோ ஸ்டுடியோ உரிமையாளர் |
| த/பெ | : முகமது யூசுப் | கிராமம் | : உடுமலைபேட்டை |
| வயது | : 35 | தாலுகா | : உடுமலைபேட்டை |
| | | மாவட்டம் | : திருப்பூர் |

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை -</u>

நான் உடுமலைப்பேட்டை யில் Photo Point என்ற பெயரில் ஸ்டுடியோ நடத்தி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை பெற்று சாட்சியம் அளிக்கிறேன். எங்கள் ஸ்டுடியோவில் மொபைல் போனில் இருக்கும் பதிவுகள் கொடுக்கப்பட்டால் அதனை கணினியில் பதிவேற்றம் செய்து பிரிண்ட் அவுட் எடுத்து கொடுக்கும் வசதி உள்ளது. வாதி சாதிக்பாட்சா–வை எனக்கு தெரியும். அவருடைய வழக்கறிஞர் அலுவலகம் எனது கடைக்கு அருகில் உள்ளது. வாதி கடந்த 05.07.2022 ம் தேதியன்று அவருடைய மொபைல் போனில் உள்ள வாட்ஸ் அப் மூலம் பரிமாறப்பட்ட பதிவுகளை பதிவிறக்கம் செய்து பிரிண்ட் அவுட் எடுத்து கொடுத்தேன். 18.01.2022 முதல் 08.06.2022 வரையிலான தரவுகளை பிரிண்ட் அவுட் எடுத்து கொடுத்தேன். மேற்படி தரவுகள் பொள்ளாச்சி Z மதகடி என்ற பெயரில் இருந்தது. அந்த பெயருடைய நபரின் மொபைல் எண். 9443425015 ஆகும். நான் அதனை டவுண்லோட் செய்து சான்றும் வழங்கியுள்ளேன். நான்  எடுத்து கொடுத்த பிரிண்ட் அவுட் மற்றும் சான்று ஏற்கனவே வா.சா.ஆ.6 ஆக PW1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–C.Rajalingom.,B.A.B.L,
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.